# ‘உதைத்த காலுக்கு முத்தமிடலாமா?’

இந்தத் தலைப்பு அறிஞர் அண்ணா வைத்த தலைப்பு. வேறொரு பிரச்சினையைப் பற்றி இத்தலைப்பின் கீழ் அறிஞர் அண்ணா விளக்கம் தந்திருப்பார். அந்தத் தலைப்பை ஆ.இராசாவின் சமீபத்திய பேச்சைப் பற்றி என் கருத்தைச் சொல்வ தற்காக நான் இங்கே பயன்படுத்திக் கொண்டேன்.

சட்டமன்றத்தில் முதலமைச்சர் விஜய்யும் சட்ட அமைச்சர் CTR நிர்மல்குமார் என்பவரும் கழகத் தலைவர் ஸ்டாலின் மிசா கைதியாக சென்றது தியாகப்போராட்டம் அல்ல. வேறு காரணங்களுக்காக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக் கப்பட்டவர். ஸ்டாலின் சிறை அதிகாரிகளால் தாக்கப்படவில்லை என்றெல்லாம் பொய்த் தகவல்களைப் பேசியிருக்கிறார்கள். சமூக விரோதச் செயல்களுக்காக கைது செய்யப்பட்டார்கள் என்று கூறியிருக்கிறார்கள்.

இதற்குக் கண்டனம் தெரிவிக்கும் விதமாக கடந்த செப்டம்பர் 12 ஆம் தேதி கழகத்தினர் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். அந்த ஆர்ப்பாட்டங்களுக்குக் கழக முன்னணி வீரர்கள் தலைமையேற்று உரையாற்றினர். சென்னையில் இரண்டு இடங்களில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. வட சென்னையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஆர்.எஸ்.பாரதி தலைமை ஏற்றார். தென் சென்னையில் சைதையில் நடந்த கண்டன ஆர்ப்பாட்டத்திற்குத் தலைமை தாங்கி ஆ.இராசா உரையாற்றினார். முதல்வர் விஜயையும் இதர அமைச்சரையும் மிகக் கடுமையாக விமர்சனம் செய்து அப்போது அவர் பேசினார். அப்பேச்சை அவர், அவராகவே முன் வந்து பேசினாரா? இல்லை.

கழகத் தலைவர், முன்னாள் முதல்வர், நூறாண்டு கடந்த அரசியல் இயக்கத்தின் குரு பீடத்தை அலங்கரிப்பவர் பொய்த் தகவல்களால் தாக்கப்படுகிறார். அதற்கான கண்டனம் தமிழகம் முழுமையும் நடைபெறுகிறது. ஒவ்வொரு முன்னணி வீரரும் ஒவ்வொரு விதமான கருத்துகளை – விமர்சனங்களை எடுத்து வைக்கிறார்கள். ஆனால் ஆ.இராசா ஆவேசத்தினால் உணர்ச்சி மேலீட்டினால் தலைவர் தாக்கப்படும் நிலையைக் கண்டு பொறுக்காமல் கடுமையான சொற்களால் தாக்குகிறார்.

**‘கல்கி’ ஒரு காலத்தில் எழுதியது போல ‘தாக்கினால் திருப்பித் தாக்குங்கள்’** என்கிற அறம் இராசாவின் ஆயுதமாகிறது. அதை வலுவான காரண, காரிய விவாதமாக்கிவிட்டார். கே.பாலசந்தரின் கதாநாயகன் ஒரு திரைப்படத்தில் நல்ல உடுப்பு அணிந்து வீதியில் நடந்து போய்க்கொண்டிருப்பான். அந்த வீதியில் தண்ணீர் தேங்கியிருக்கிறது. அதைக் கடந்து கொண்டு இருக்கிறான் அந்தக் கதாநாயகன். ஒரு கார் அப்போது வேகமாக வருகிறது. வீதியில் தேங்கிய தண்ணீர் மீது கார் செல்கிறது. அதனால் தண்ணீர் கதாநாயகனின் மீது அடிக்கிறது; அவன் அணிந்த உடுப்பெல்லாம் நனைந்து விடுகிறது. கதாநாயகன் ஆவேசமாக அந்தக் காரோட்டியை ‘….யா பையா’ என்று திட்டுகிறான். உணர்ச்சி – ஆவேசப் பேச்சு வெளிப்பட்டு விடுகிறது. இது எல்லா மனிதர்களுக்கும் உண்டானதுதான். ஆகவே திரைப்படக் காட்சியாகவும் அது ஆகிவிட்டது.

தமிழக அரசியல் மேடைகளில் பூங்காற்றும் வீசுவதுண்டு. தென்றல் வந்து தெம்மாங்குப் பாடுவதும் உண்டு. சண்டமாருதம் – பெருங்காற்று – கடும் புயல் வீசி சேதப்படுத்தியதும் உண்டு. சற்றொப்ப 70 ஆண்டுகளாகத் தமிழக மேடைகளைப் பார்த்தும், கேட்டும், பக்கம் நின்று செவிமடுத்தும் இருக்கின்றேன். இப்போது எனக்கு வயது 85. யாரும் மறு கன்னத்தைக் காட்டவில்லை. தேவதத்தன் புத்தனைக் கொல்ல வந்தபோது அவர் போல புன்னகைப் பூக்கவில்லை. அவரவர் உணர்ச்சிக்கேற்ப மேடைப் பேச்சுகளுக்கு எதிர்வினை ஆற்றிக் கொண்டுதான் இருந்தனர். அதற்காக ஆவேசப் பேச்சை நான் சரி என்று சொல்ல வரவில்லை. மனித இயல்பு மாறுவதற்கு – குணமாறுதலை அடைவதற்கு ‘அறம்’கூட சற்றுப் பின்வாங்கத் தொடங்குகிறது என்றே சொல்ல வருகின்றேன். அறத்தின் செயல்பாடு இல்லாத போது அங்கே மறம் வந்து கோலோச்சுகிறது. அது எதிர்வினைதான்!

அறிஞர் அண்ணா பொதுக்கூட்ட மேடைகளில் விபூதி வீரமுத்து என்றவர் எப்படிப் பேசுவார் என்பதை எடுத்துக் கூறியிருக்கிறார். நான் வீபூதி வீரமுத்து பேச்சைக் கேட்டதில்லை. ஆனால் அணுகுண்டு அய்யாவு, திருப்பூர் வின்சென்ட், எம்.எஸ். கிரிகோரி, திருப்பத்தூர் ராமமூர்த்தி (பின்னாளில் இவர் தி.மு.க.வில் இணைந்துவிட்டார்) ஆகியோர் ஆபாசத்தின் உச்சிக்குப் போய் பொது மேடைகளில் ஆடி ஆடிப் பேசியதைப் பார்த்தும் கேட்டும் இருக்கிறேன். அண்ணாதுரைக்கும் கருணா நிதிக்கும் அப்பன் யார் என்றே தெரியாதவர்கள். இவர்கள் எல்லாம் கட்சியின் தலைவர்கள் – என்று பேசினார்கள். அறிஞர் அண்ணாவின் முகத்தைப் பற்றி ஒரு தலைவர் கேலிச் செய்து பேசினார். **‘மூஞ்சியைப் பார் மூஞ்சியை…. இந்த மூஞ்சியா முதல் மந்திரியாகப் போகுது’** என்று கேட்டார்கள். அண்ணா சொன்னார், **‘இந்த முகம் பார்க்க வேண்டியவர்கள் பார்த்து இரசிக்க வேண்டியவர்கள் இரசித்த முகம்’** என்று பெருத்த ஆரவாரத்திற்கிடையே பொதுக்கூட்டங்களில் பதில் அளித்தார்.

நீதிக்கட்சி காலத்தில் கண்ணியமிக்க பேச்சுகளைத் தேர்தல் பரப்புரையாகப் பேசுவதற்குப் பதில் தரக்குறைவான பேச்சுகளைப் பேசத் தொடங்கியவர் சத்தியமூர்த்தி அய்யர்தான் என்று ஏடுகளைப் புரட்டிப் பார்த்தால் தெரிந்துகொள்ள முடிகிறது.



**க.திருநாவுக்கரசு**
திராவிட இயக்க ஆய்வாளர்

**“தாலி அறுத்த இராமசாமி முதலியார்க்கா உங்கள் ஓட்டு”** என்று பிரச்சாரம் செய்தவர் சத்தியமூர்த்தி அய்யர்.

ஆபர்ட்ஸ்பரி மாளிகையில் (அறிவாலயத்தின் பக்கத்திலே இருந்த பெரிய திருமண மண்டபம் – இப்போது வேறு பெயரில் ஏதோ அலுவலகம் ஒன்று அங்கே இயங்குகிறது) சி.பா.ஆதித்தனாருக்குப் பிறந்தநாள் விழா நடைபெற்றது. அந்த விழாவில் கலைஞரும், இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆரும் கலந்து கொண்டனர். கல்கண்டு ஆசிரியர் தமிழ்வாணன் அந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசினார். அண்ணா அப்போது தமது கடுமையான தோள்வலிக்குச் சிகிச்சை எடுத்துக் கொண்டிருந்த காலம். தமிழ்வாணன் பேசுகிறபோது **‘இந்தக் காலத்தில் தோள்வலித் தலைவர்கள், கால்வலித் தலைவர்கள் எல்லாம் உண்டு. ஆதித்தனார் அப்படி அல்ல’** என்றார். கூட்டம் தமிழ்வாணனைப் ‘பேசாதே, போ’ என்று குரல் எழுப்பியது. பிறகு கலைஞரும் எஸ்.எஸ்.ஆரும் அவரைப் பத்திரமாகக் கூட்டத்திலிருந்து வழி அனுப்பி வைத்தனர்.

‘குரல் கெட்ட புதுவைக்குயிலே! பாதக்குறடு எடுத்து பன்நூறு முறை அடிப்பேன்’ என்று கண்ணதாசன் ஒரு முறை பாரதிதாசனை எழுதிவிட்டார். பெரிய சர்ச்சை ஆயிற்று. இதே பாணியில் கண்ணதாசன், பிரதமராக இருந்த நேருவையும் தாக்கினார். அவர் ஒரு வாரத்தில் சென்னை வருவதாக இருந்தது. காங்கிரஸ் ஊழியர் கூட்டத்தில் நேரு ஆபர்ட்ஸ்பரியில் வந்து கலந்து கொண்டார். அந்தக் கூட்டத்திற்கு வந்த நேருவின் காலில் நெடுங்கிடையாக எட்டு அங்கங்கள் மண்ணில் பட கண்ணதாசன் விழுந்தார். 1971 இல் நடைபெற்ற தேர்தலில் மகாகூட்டணியினர் ‘முண்டச்சி’ என்கிற சொல்லைப் பயன்படுத்தினர். அதே ஆண்டு நடைபெற்ற தேர்தலில் மயிலாப்பூருக்குத் தி.மு.க. ஆதரவு வேட்பாளராகச் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. நிறுத்தப்பட்டார். இவருக்கு எதிராக ஒரு பெண் வேட்பாளர் நிறுத்தப்பட்டார். அவர் ம.பொ.சி.யின் மீசையை ஆபாச பேச்சின் மூலம் எடுத்துரைத்தார். இது பெரும் சர்ச்சை ஆயிற்று. கலவரம் நடந்தது. அந்தப் பெண் வேட்பாளர் தாக்கப்பட்டார்.

பிரதமராக இருந்த நேரு ‘நான்சென்ஸ்’ என்று கூறியதற்காக இரயில் நிறுத்தப் போராட்டத்தை நடத்தியது தி.மு.க. அது மும்முனைப் போராட்டத்தில் ஒன்று. தி.மு.க. தலைவர்களுள் ஒருவரான என்.வி.நடராசன் கடற்கரைக் கூட்டத்தில், ‘மத்திய மந்திரிகள் தமிழகம் வந்தால் கல்லால் அடியுங்கள்’ என்று பேசினார். அந்தக் கூட்டத்தில் இருந்த அண்ணா அவரை அப்பேச்சைத் திரும்பப் பெறுமாறு கேட்டுக் கொண்டார். அவர் பேசிக் கொண்டிருக்கிற போதே அதற்கான வருத்தத்தைத் தெரிவித்தார்.

தென் தமிழ்நாட்டுத் தலைவர்களுள் ஒருவர் அறிஞர் அண்ணாவை மதுரை நகரில் நடைபெற்ற கூட்டத்தில் தகாத சொற்களால் வசைமாரிப் பொழிந்தார். அறிஞர் அண்ணா மதுரையில்தான் அப்போது இருந்தார். அந்தத் தலைவர் பேசியதற்குப் பிறகு இரண்டு நாள்களில் அண்ணா பேசுவதாக முன்னரே கழகத்தினர் கூட்டத்தை ஏற்பாடு செய்து இருந்தனர். அந்தக் கூட்டத்தில் அண்ணா பேசினார். கலவரம் நிகழக்கூடும் என நினைத்து வேல், கம்பு, ஆயுதங்களோடு அந்தக் கூட்டத்திற்கு வந்தவர்களும் உண்டு. ஆனால் அறிஞர் அண்ணா அந்தத் தலைவருக்குப் பதில் அளித்துப் பேசவில்லை. மாறாக, அப்போதைய அரசியல் பிரச்சினைகளைப் பற்றி பேசினார். எந்தக் கலவரமும் நடைபெறவில்லை. கூட்டம் அமைதியாக நடந்தது. எதிரிகள் ஏமாற்றமடைந்தனர்.

1967 தேர்தல் தொடங்கப்படும் வரை தி.மு.க.வைக் காங்கிரஸ், கம்யூனிஸ்டுகள், சோசலிஸ்டுகள், தமிழரசுக் கழகம் என அனைவரும் எல்லா வகையான ‘ரசங்களை’ பொதுமேடைகளில் பிழிந்தெடுத்தனர். இப்படியான செய்திகளைச் சொல்லிக்கொண்டே போகலாம். எடுத்துக் காட்டாக சிலவற்றை கூறி இருக்கிறேன். தி.மு.க.வும் எல்லாக்கட்சிகளுக்கும் பதில் கூறியது. எதிரிகள் எந்த பாணியில் பதில் கூறுகிறார்களோ அதே பாணியில் பதில் கூறியது தி.மு.க.

அரசியல் மேடைகள் இவ்வாறு இருப்பதற்குக் காரணம் முதலில் தாக்குதல் தொடுக்கப்படுகிற போது அந்தத் தாக்குதல் சம்பந்தப்பட்டவர்களால் முடிக்கப்படுவது தானே – மேடை அறம்! அது அப்போதும் நடந்தது. இப்போதும் நடக்கிறது.

அப்படி நிகழ்ந்ததுதான் இன்றைய ஆ.இராசாவின் பேச்சும்! அது முதலில் தொடுக்கப்பட்டது யாரால்?– என்று பார்க்கவேண்டும். ஆகவே அதற்குரிய முடிப்பை ஆ.இராசா நிகழ்த்தினார். அதற்குக் கண்டனங்கள் எழுந்தன. ஆ.இராசா வருத்தம் தெரிவித்து அறிக்கை வெளியிட்டார். தினத்தந்தி நாளேடுதான் கொஞ்சம் முழுமையாக அந்த அறிக்கையை வெளியிட்டு இருக்கிறது. ஆ.இராசா தனது தலைவர் பொய்யுரையால் தாக்கப்படுகிறார். அவரது தியாகத்தைக் கொச்சைப்படுத்துகிறார்கள். இழிவுபடுத்துகிறார்கள் என்கிறபோது கண்டன ஆர்ப்பாட்டக் கூட்டத்தில் தலைமையேற்று பேசுகிறபோது, ஆ. இராசா கே.பாலச்சந்திரரின் திரைப்பட நாயகன் ஆகிவிடுகிறார். ஆவேசப்படுகிறார். கோபப்படுகிறார். பேசிவிடுகிறார்.

அப்போது அவர் தி.மு.க.வின் துணைப் பொதுச் செயலாளர் இல்லை. எம்.பி. இல்லை. அறம் அவரிடமிருந்து மறைந்துவிடுகிறது. ‘உதைத்த காலுக்கு முத்தமிடலாமா?’ என்ற உணர்வு மேலோங்கிவிடுகிறது. சொற்களால் அவர்கள் தாக்கியதால் இவரும் தாக்கினார். இவ்வளவுதான் பிரச்சினை. வழக்குப் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. விசாரணைக்கு வருமானால் தொடுத்ததும் பேசப்படும். முடித்ததும் பேசப்படும். நீதிமன்றம் தீர்ப்பு வழங்கட்டும். நீதிக்கு நாம் தலைவணங்குவோம்.

ஆ.இராசா தனது வருத்தத்தை வெளியிட்ட நாளேடுகளை ஒன்றுவிடாமல் நான் படித்துப் பார்த்தேன். மற்ற ஏடுகளில் எனக்குத் தென்படாத ஒரு செய்தி ‘தீக்கதிரில்’ ஒற்றை வரியில் மிளிர்ந்தது. ‘ஆ.இராசாவின் பேச்சுக்கு சி.பி.எம். உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் கண்டனம் தெரிவித்தனர். மேலும் கனிமொழியும் பொருத்தமான திருக்குறள் ஒன்றைத் தனது ‘எக்ஸ்’ பக்கத்தில் பதிந்துள்ளார்’. இதுதான் மிளிர்ந்த அந்த ஒற்றை வரி. என்ன திருக்குறள் பதிந்துள்ளார்’ – என்று விசாரித்துப் பார்த்ததில், ‘யாகாவாராயினும் நாகாக்க, காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு’ என்பதே அந்தக் குறள். இது அறத்துப்பாலில் இல்லற இயலில் கூறப்பட்டுள்ள குறள். எதையும் காக்காமல் போனாலும் நாகாப்பது பேரறம்தான். ‘சிறுமையுள் நீங்கிய இன்சொல்’ (குறள்98)லைத்தான் ஆ.இராசா கூறியிருப்பார். அவருக்கு அந்த வாய்ப்பை எதிரிகள் வழங்கவில்லை. அறமல்லாத தீமையை அகற்றுவதற்கும் அதுதான் துணை என்று (குறள்76) பொதுமறை கூறுகிறதே – ‘மறத்திற்கும் அஃதே துணை’ என்கிறதே. ஆகவே இராசா கடுஞ்சொல்லைப் பயன்படுத்தினார். இதுதான் ஆ.இராசாவின் ஆவேசப் பேச்சுக்குக் காரணம்.

முதல்வர் விஜய் வகையறாக்கள் தி.மு.க. தலைவர் மீது வைக்கும் பொய்யான – உண்மைக்கு மாறான, அதைப்போல நடவாத ஒன்றைச் சட்டமன்றத்திலும் வெளியேயும் கூறுவதற்கு அவர்கள் நாணப் படவில்லை. அந்தப் பொய்யைச் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். நாணுடைமையைப் பற்றி மணக்குடவர் சொல்கிறபோது ‘அறம் பொருள் இன்பங்களில் பிறர் பழியாமல் ஒழுகுதல்’ என்கிறார். பரிதியார் சொல்கிறார், ‘நாணுடைமையாவது நீதியில்லாதது கண்டால் நாணுதல்’ என்கிறார். பொருள்பாலில் அரசியல் ஒழிபியலில் நாணுடைமையைப் பற்றி பேசுகிற வள்ளுவத்திற்கு மணக்குடவர், பரிதியார் சொல்லுகிற விளக்கம் அது. இந்த நாணம் இல்லாததால் – அறமல்லாதவற்றை அவர்கள் பேசுவதால் – கட்சி அறத்தைக் காக்க வேண்டி ஆ.இராசா வெடிப்புற பேச வேண்டியதாயிற்று.

ஆகவே ‘யாகாவாராயினும்’ குறளை ஆ.இராசா செயல்படுத்த முடியாததற்குக் காரணம், அறமல்லாதவற்றை அவர்கள் சொல்வதாலும், அதனால் நாணயமற்றவர்களாக அவர்கள் இருப்பதாலும், தொடர்ந்து பொய்யைப் பேசுவதாலும் ஆ.இராசா கடுஞ்சொல்லைப் பயன்படுத்த வேண்டியதாயிற்று – வலிந்தோ உள்நோக்கத்தோடோ அவர் அப்படிப் பேசவில்லை. நாகாக்கும் அரண் மறம் ஆகிவிடுகிறது. இது வள்ளுவத்தின் ஒரு கூரே. வள்ளுவம் ஒரு வாழ்வியல் நூல். மேற்பரப்பில் அதன் பொருள் பொதுமையாய் இருக்கும். அதை நடைமுறைப்படுத்தி பார்க்கும்போது அதன் வாழ்வியல் நடை பெரும் பொருளழகுக் கொண்டதாக இருக்கும். அதன் பொருளைக் கொண்டும் கூட்டியும் காணும்போது பசிபிக்கின் ஆழமாய் சென்று கொண்டே இருக்கும். குறளை விமர்சனத்திற்குப் பயன்படுத்துவதிலும் ஓர் ஆய்வு மனப்பான்மை இருக்க வேண்டும்.

இதுவரை கழகத்திற்காக உயிர்த் தியாகம் செய்தவர்களின் பட்டியலை தயாரித்தால் ஆயிரம் பேருக்கு மேல் இருக்கும். அவர்கள் எல்லாம் உணர்ச்சியின் மேலீட்டால் – ஆவேசத்தால் – கொள்கைப் பற்றால் – தலைவர் கலைஞர் மேல் காட்டிய பிணைப்பால் தம்முயிரையே போக்கிக் கொண்டவர்கள், அந்த வெளியில் தெரியாத வேர்கள் வீரவணக்கத்திற்குரியவர்கள்; போற்றுதலுக்குரியவர்கள்; என்றும் தி.மு.கழகத்தினரால் நினைவுகூரத் தக்கவர்கள். அந்த அடிமட்ட தோழனின் உணர்வைத்தான் வீராவேசம் கொண்டு ஆ.இராசா பேசினார். எதிரொலித்தார். அறிஞர் அண்ணா தலைப்பிட்டது போல உதைத்த காலுக்கு முத்தமிடவா முடியும்? ●



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலையொட்டி சேலம் மத்திய மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள மதுராந்தகம் வடக்கு ஒன்றியம் ஜானகிபுரம் ஊராட்சி வாக்கு சாவடி எண் 68, 69 உட்பட்ட பகுதியில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் இரா. இராஜேந்திரன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார். உடன் சேலம் மாநகர செயலாளர் பா.ரகுபதி, காடையாம்பட்டி கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் கே.சி. அறிவழகன், மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் பெருமாள் , பேரூர் கழக செயலாளர் கே.ஆர். பிரபாகரன், மதுராந்தகம் வடக்கு ஒன்றிய செயலாளர் சத்திய சாய் குமார். துணை செயலாளர் திருஞானச்செல்வம், ஜானகிபுரம் ஊராட்சி துணை தலைவர் ரமேஷ், கிருஷ்ணன், யுவராஜ், அமுத குமார் உட்பட ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



புதுச்சேரி மாநிலம், தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தல் வெற்றி வேட்பாளர் சேது (எ) செல்வத்தை ஆதரித்து, விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன், புதுவை மாநிலம், காலாப்பட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செந்தில் (எ) ரமேஷ் ஆகியோர், விழுப்புரம் மத்திய மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள பாகம் எண்: 5, கவுண்டம்பாளையத்தில் வீடு வீடாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்கள். உடன் வானூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தி.கௌதம், மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.எஸ்.வாசன், தங்கவேல் , கோபால், ஒன்றிய செயலாளர்கள் தயாளன், பழனி, புதுவை மாநில கழக நிர்வாகிகள் மற்றும் விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக நிர்வாகிகள் பலர் இருந்தனர்.